## மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நாமக்கல்

## வடிவாக்கச் சிந்தனை குறித்த ஆசிரியர்களுக்கான தன்னார்வப் பயிற்சி

நாமக்கல் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும், இராசிபுரம் ரோட்டரி சங்கமும் இணைந்து 'வடிவாக்கச் சிந்தனை' என்ற கருத்தில் தன்னார்வப் பயிற்சியை இராசிபுரம் ரோட்டரி ஹாலில் 80 ஆசிரியர்களுக்கு 13.5.2025 அன்று பயிற்சி கொடுக்கப்பட்டது.

பயிற்சியின் துவக்கவிழாவில் இந்நிறுவன விரிவுரையாளர் ஏ. சிவபெருமான் வரவேற்புரை வழங்கினார். இராசிபுரம் ரோட்டரி சங்கத் தலைவர் முருகானந்தம் அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

கவிக்குயில் பாவலர் செ. பேச்சியம்மாள் அவர்கள் எழுதிய ஔவையாரின் ஆத்திச்சூடி அறநெறிக் கதைகள் என்ற நூலை இராசிபுரம் ரோட்டரி சங்க உறுப்பினர் சுரேந்திரன் வெளியிட பவுண்டேசன் தலைவர் சிவக்குமார் அவர்கள் பெற்றுக் கொண்டார். ஆசிரியர்களுக்கு 'டிசைன் திங்கிங்' பயிற்சி நூலை மருத்துவர் இராமகிருஷ்ணன் மற்றும் வெங்கடாசலபதி போன்றோர் வழங்கினார்கள். ரோட்டரி மகிழ்ச்சிப் பள்ளிகள் தலைவர் கருணாகர பன்னீர்செல்வம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இராசிபுரம் ரோட்டரி சங்க செயலர் இராமசாமி நன்றியுரை கூறினார்.

வடிவாக்கச் சிந்தனைக் குறித்தப் பயிற்சியை நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் மு. செல்வம் அவர்கள் வழங்கினார்.

பள்ளிகளின் தேவைகளை நிறைவேற்றவும், வகுப்பறைச் செயல்பாடுகளில் எதிர்ப்பார்ப்புகளை நடைமுறைப்படுத்தவும், மாணவர்களின் ஊக்கம் மற்றும் உந்துதல்களுக்கு செயல்பாடுகளை அமைக்கவும் ஆசிரியர்களுக்கு வடிவாக்கச் சிந்தனை (Design Thinking) பெரியளவில் உதவும் எனவும், மேலும் ஆசிரியர்கள் தங்களையும், கற்பித்தல் திறன்களையும், ஆசிரியர் – பள்ளி – மாணவர்கள் என்ற உறவை மேம்படுத்தவும் வடிவாக்கச் சிந்தனை அவர்களுக்கு உதவும் என்றும் நிறுவன முதல்வர் மு. செல்வம் கூறினார்.

வடிவாக்கச் சிந்தனையின் கூறுகளான அனுதாபம், வரையறை, யோசனைகள், முன்மாதிரி உருவாக்கம் மற்றும் சோதித்து மதிப்பீடு செய்தல் போன்றவற்றைப் பணிச்சூழலில் பயன்படுத்துவது குறித்து வெற்றிக்கதைகள் மூலமாக ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

.